Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்
Madurai Mani Tamil Evening Daily ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.



| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 81 | உள்ளூர் - 22.03.2026 | ஞாயிறு | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 81 | வெளியூர் - 23.03.2026 | திங்கள் | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |



சென்னை மாநகராட்சி 20 காலிப்பணியிடங்கள்!

மீண்டும் மீண்டும் ஒரே பிரச்சனையா? ஜோதிட காரணங்கள்!

அனல் பறக்கும் தேர்தல் கள செய்திகள்!

பிஎஃப் சந்தாதாரர்களுக்கு பல குட் நியூஸ்!

## உலக தண்ணீர் தினம்: பிரதமர் மோடி வாழ்த்து!

டெல்லி, மார்ச். 22–

பிரதமர் நரேந்திரமோடி இன்று(ஞாயிற்றுக்கிழமை) உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு தனது வாழ்த்துகளை தெரிவித்ததோடு, பூமியின் எதிர்காலத்தை வடிவமைக்கும் அத்தியாவசிய உயிர் கூறிற்கு தனது புகழஞ்சலியையும் செலுத்தினார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ்வலைதளத்தில் கூறியிருப்பதாவது:–

“நீர் நம்மை தாங்கி நிற்பதோடு மட்டுமல்லாமல் பூமியின் எதிர்காலத்தையும் வடிவமைக்கிறது. உலக தண்ணீர்




தினத்தை முன்னிட்டு நீரின் ஒவ்வொரு துளியையும் சேமித்து அதை பொறுப்பாக பயன்படுத்துவதற்கான நமது உறுதிபாட்டை மீண்டும் வலியுறுத்துவோம் இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐ.நா. சபையின்கூற்றுப்படி, 2030–ஆம் ஆண்டுக்குள் அனைவருக்கும் நீர் மற்றும் சுகாதாரத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட நிலையான வளர்ச்சி இலக்கு 6–ஐ நோக்கிப் பணியாற்றுவதே உலக நீர் தினத்தின் முக்கிய நோக்கமாகும். 2026–ஆம் ஆண்டு உலக நீர் தின பிரச்சாரமானது, நீர் தொடர்பான முடிவுகளை எடுப்பதில் பெண்களுக்கு சமமான குரல், தலைமைத்துவம் மற்றும் வாய்ப்புகள் இருப்பதை உறுதிசெய்யும் ஒரு மாற்றத்தை உருவாக்கும், உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறைக்கு அழைப்பு விடுக்கிறது என ஐ.நா. அமைப்பு தெரிவித்துள்ளது.

## டில்லி மாநகரில் வளர்ச்சி பணிகள் முதல்வருடன் பிரதமர் ஆலோசனை!

புதுடில்லி, மார்ச். 22–

தலைநகர் டில்லியில் செய்ய வேண்டிய வளர்ச்சிப் பணிகள் குறித்து, பிரதமர் நரேந்திர மோடியுடன், முதல்வர் ரேகா குப்தா நேற்று ஆலோசனை நடத்தினர்.

இதுகுறித்து, முதல்வர் ரேகா குப்தா, சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவு:

பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து ஆலோசிக்கும் வாய்ப்பு நேற்று கிடைத்தது. பிரதமர் அழைப்பின் பேரில், அவரது இல்லத்தில் சந்தித்தேன். டில்லி அரசின் பணிகள் குறித்து விரிவாக கேட்டறிந்தார். மேலும், செய்ய வேண்டிய வளர்ச்சிப்



பணிகள் குறித்து விவாதித்தார். பிரதமர் மோடியின் விலைமதிப்பற்ற வழிகாட்டுதல்களை பெற்றேன். தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய ஆலோசனைகளை வழங்கினார். டில்லியின் வளர்ச்சி மீது பிரதமர் மோடி கொண்டுள்ள தனித்துவமான பாசம் புதிய ஆற்றலையும் உத்வேகத்தையும் அளித்தது.

டில்லி அரசின் அனைத்துத் துறை சார்ந்த வளர்ச்சி குறித்து விரிவான ஆலோசனை செய்தோம். டில்லி மாநகரின் உள்கட்டமைப்பை வலுப்படுத்துவது மற்றும் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவது குறித்து விரைந்து செய்ய வேண்டிய பணிகள் குறித்து அறிவுறுத்தல்கள் வழங்கினார்.

பிரதமர் மோடியின் திறமையான வழிகாட்டுதல் மற்றும் அவருடைய ஆதரவுடன், டில்லியை முன்னேற்றம், செழிப்பு மற்றும் நல்லாட்சி ஆகியவற்றின் புதிய உச்சத்துக்கு கொண்டு செல்வோம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## தொடர் தாக்குதல் எதிரொலி: 24 மணி நேரத்தில் ஈரான் தூதரக ஊழியர்கள் வெளியேற சவுதி உத்தரவு!

ரியாத், மார்ச். 22–

ஈரானின் தொடர்ச்சியான தாக்குதல்களை சவுதி அரேபியாவின் வெளியுறவு அமைச்சகம் கண்டித்ததுடன், அந்நாட்டு தூதரக ஊழியர்கள் 5 பேர் 24 மணி நேரத்திற்குள் நாட்டை விட்டு வெளியேறுமாறும் உத்தரவிட்டது.

வளைகுடா நாடுகளின் மீதான தாக்குதல்களை ஈரான் நிறுத்த வேண்டும். தொடர்ந்து தாக்கப்பட்டால் ராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என சவுதி அரேபியா வெளியுறவு அமைச்சர் இளவரசர் பைசல் பின் பர்ஹான் அல் சவுத் எச்சரித்து இருந்தார். ஆனால் ஈரான் தொடர்ந்து தாக்குதல்களை



தொடர்ந்து வந்தது. இந்த சூழலில், ஈரானின் தொடர்ச்சியான தாக்குதல்களை சவுதி அரேபியாவின் வெளியுறவு அமைச்சகம் கண்டித்துள்ளது. ராணுவத் தூதர் உட்பட ஈரான் தூதரக ஊழியர்கள் 5 பேரை விரும்பத்தகாத நபர்கள் (persona non grata) என சவுதி அரேபியா அறிவித்தது. நாட்டை விட்டு வெளியேற அவர்களுக்கு 24 மணி நேரம் அவகாசத்தை சவுதி அரேபியா அரசு விதித்துள்ளதால், அப்பகுதியில் பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது.

ஈரானின் தொடர்ச்சியான தாக்குதல் சர்வதேச சட்டம் மற்றும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் தீர்மானம் ஆகியவற்றின் அப்பட்டமான மீறலாகும்.

இஸ்லாமிய நம்பிக்கையின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கும் எதிரானவை. தனது இறையாண்மை, பாதுகாப்பு மற்றும் தேசிய நலன்களைப் பாதுகாக்க சவுதி அரேபியா அரசு அனைத்து முக்கியமான நடவடிக்கைகளையும் எடுக்கும். தாக்குதல்கள் தொடர்ந்தால் கடுமையான விளைவுகள் ஏற்படும். ஈரானின் நடவடிக்கைகள் மோதலை மேலும் தீவிரப்படுத்தி, தற்போதும், எதிர்காலத்திலும் தூதரக உறவுகளைச் சேதப்படுத்தக்கூடும் என சவுதி அரேபியா எச்சரித்துள்ளது.

## இஸ்ரேல் அணுசக்தி நிலையம் அருகே ஈரான் ஏவுகணை தாக்குதல்..100-க்கும் மேற்பட்டோர் காயம்!

ஈரான், மார்ச். 22–

ஈரான் – இஸ்ரேல், அமெரிக்கா இடையேயான போர் 23வது நாளை எட்டியுள்ளது. நேற்று ஈரானின் நடான்ஸ் அணுசக்தி நிலையம் மீது அமெரிக்கா – இஸ்ரேல் கூட்டுத் தாக்குதல் நடத்தியதாகவும் இதில் கதிர்வீச்சு அபாயம் ஏற்படவில்லை என்றும் ஈரான் அணுசக்தி அமைப்பு தெரிவித்தது.

இந்த சூழலில் இதற்கு பதிலடியாக இஸ்ரேல் அணுசக்தி நிலையம் அருகே ஈரான் நேற்று ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தெற்கு இஸ்ரேலில் உள்ள



டிமோனா பகுதியில் அமைந்துள்ள ‘ஷிமோன் பெரஸ் நெகேவ் அணு ஆராய்ச்சி மையத்தை’ இலக்கு வைத்து ஈரான் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது. ஆனால் ஏவுகணை ஏவுகணைகள் நகரின் குடியிருப்புப் பகுதிகளில் விழுந்ததில் கட்டிடங்கள் பலத்த சேதமடைந்தன.


இந்த தாக்குதலில் டிமோனோ மற்றும் அருகில் உள்ள அராத் நகரில் மொத்தம் 100–க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இதில் 10 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக கூறப்படுகிறது.

இஸ்ரேலின் வான் பாதுகாப்பு அமைப்புகள் இந்த ஏவுகணைகளை தடுப்பதில் தோல்வியடைந்துள்ளன. இரண்டு பாலிஸ்டிக் ஏவுகணைகள் நேரடியாகத் தரைப் பகுதியில் விழுந்து வெடித்ததை இஸ்ரேல் ராணுவ செய்தித் தொடர்பாளர் எஃபி டெஃப்ரின் உறுதிப்படுத்தியுள்ளார். க்குதலில் டிமோனா அணுசக்தி மையத்திற்கு நேரடிப் பாதிப்போ அல்லது கதிர்வீச்சு கசிவோ ஏற்படவில்லை என தாக்குதலுக்கு பிந்தைய சர்வதேச அணுசக்தி முகமை ஆய்வில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## ஆப்பு..!! கோடைகால சுற்றுலா பயணங்ளுக்கு? தாறுமாறாக உயரப் போகும் விமான கட்டணம்!!

புதுடெல்லி, மார்ச். 22–

இந்தியாவில் விரைவில் கோடை விடுமுறை வர இருக்கிறது, ஏராளமானவர்கள் விடுமுறை ஒட்டி சுற்றுலா செல்ல விமானங்களை பயன்படுத்துவார்கள். அப்படி விமானம் மூலம் சுற்றுலா பயண திட்டமிட்டு இருப்பவர்களுக்கு மத்திய அரசு பெரிய இடியை இறக்கியுள்ளது. மத்திய அரசு உள்நாட்டு விமான டிக்கெட் கட்டணங்களுக்கு விதித்திருந்த கட்டுப்பாட்டினை நீக்கி இருக்கிறது. எனவே இந்தியாவில் 23.03.2026 முதல் விமான கட்டணங்கள் உயர்த்தப்பட உள்ளன.




கடந்த ஆண்டு இறுதியில் இந்தியாவின் முன்னணி விமான சேவை நிறுவனமான இண்டிகோவில் ஏற்பட்ட குளறுபடிகளால் திடீரென நாடு முழுவதும் நூற்றுக்கணக்கான இண்டிகோ விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டன. இதனால் ஆயிரக்கணக்கான பயணிகள் அவதி அடைந்தனர். கிட்டதட்ட 1 மாத காலம் இந்த பிரச்சினை நீடித்தது. திடீரென விமான சேவை ரத்து, பல மணி நேரம் விமான தாமதம் என பயணிகள் பல சிக்கல்களுக்கு ஆளாகினர். இந்தியாவில் உள்நாட்டு விமான சேவையில் இண்டிகோ 60% பங்களிப்பை கொண்டிருந்ததே இந்த நிலைக்கு காரணம். அந்த சமயத்தில் உள்நாட்டு விமான சேவைகளுக்கு டிமாண்ட் அதிகரித்தது. எனவே டிமாண்ட் அதிகரித்ததால் மற்ற விமான சேவை நிறுவனங்கள் அதிக கட்டணங்களை வசூல் செய்ய தொடங்கின.

இந்நிலையில் டிசம்பர் மாதத்தில் மத்திய அரசு விமான டிக்கெட்டுக்கு அதிக கட்டணங்களை விதிக்கக்கூடாது என அறிவிப்பு வெளியிட்டது. இதன்படி விமான நிறுவனங்கள் எக்கனாமிக் வகுப்பில் ஒரு வழி பயணங்களுக்கு அதிகபட்சமாக 18,000 ரூபாய் வரை மட்டுமே கட்டணம் வசூலிக்க வேண்டும் என ஒரு உச்ச வரம்பினை நிர்ணயம் செய்தது.

இந்த டிக்கெட் கட்டண உச்சவரம்பு இன்றுடன் நீக்கப்படுவதாக அரசு அறிவித்துள்ளது.இண்டிகோ விமான சேவை சீராகி இருப்பதாலும், ஈரான் போரால் விமான எரிபொருள் விலை உயர்ந்ததாலும் இந்த கெடு பிடிகளை விலக்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.இன்றுடன் இந்த கெடுபிடி நீக்கப்படுவதால் நாளை முதல் இந்தியாவில் உள்நாட்டு விமான சேவை கட்டணங்கள் தாறுமாறாக உயர போகின்றன. ஈரான் போர் காரணமாக விமான எரிபொருள் கிடைக்காமல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது, விமான எரிபொருள் விலையும் கூடி விட்டது , இதற்கிடையே மத்திய அரசு விமானங்களில் 60% இருக்கைகளுக்கு கூடுதல் கட்டணம் எதுவும் கேட்க கூடாது என அறிவித்து விட்டது இதனால் எங்களுக்கு பெரிய அளவில் நஷ்டம் ஏற்படும் என விமான சேவை நிறுவனங்கள் மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்திருந்தன.

## ஹோர்முஸ் நீரிணை திறப்பு! ஈரானுக்கு டிரம்ப் இரு நாள் கெடு!!

அமெரிக்கா, மார்ச்.22–

ஹோர்முஸ் நீரிணையை ஈரான் 48 மணி நேரத்துக்குள் திறக்க வேண்டும் என அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கெடு விதித்துள்ளார்.

ஈரானுடனான போரில், ஹோர்முஸ் நீரிணையைத் திறக்கும் முயற்சியில் நட்பு நாடுகள் தங்களின் போர்க் கப்பல்களை அனுப்ப வேண்டும் என அமெரிக்க அதிபர் டிரம்ப் கோரிக்கை விடுத்தார்.

இருப்பினும், டிரம்ப்பின் கோரிக்கையை பெரிதாய் எந்த நாடும் கண்டுகொள்ளவில்லை. இந்த நிலையில்தான், அடுத்த 48 மணிநேரத்துக்குள் ஹோர்முஸ் நீரிணையை ஈரான் திறக்க வேண்டும் என்று டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார். இல்லையெனில், ஈரானின் மின் உற்பத்தி கட்டமைப்புகள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தும் என்றும் டிரம்ப் எச்சரித்துள்ளார்.

குறிப்பாக, ஈரானின் பெரிய மின் உற்பத்தி கட்டமைப்பின் மீதுதான் முதல் தாக்குதல் இருக்கும் என்றும் கூறியுள்ளார்.

ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து தாக்குதல் நடத்தி வரும்நிலையில், ஈரானும் உரிய பதிலடி கொடுத்து வருகிறது.

மேலும், உலகளாவிய எண்ணெய் வர்த்தகத்தில் முக்கிய பங்களிக்கும் ஹோர்முஸ் நீரிணையையும் ஈரான் மூடியது.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாட்டுக் கப்பல்கள், அவர்களின் நட்பு நாடுகளின் கப்பல்களை ஹோர்முஸ் நீரிணை வழியே அனுமதிக்க முடியாது என ஈரான் எச்சரிக்கை விடுத்தது.

இந்த நிலையில்தான்,



ஹோர்முஸ் நீரிணை விவகாரத்தில் ஈரானுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

## கேரளாவில் தேர்தல் பிரசாரத்தை தொடங்கும் ராகுல் காந்தி!




புதுடெல்லி, மார்ச். 22–

கேரள மாநிலத்தில் வரும் ஏப். 9 ஆம் தேதி சட்டப்பேரவைத் தேர்தல் நிலையில், மார்ச் 25 ஆம் தேதி முதல் பிரசாரத்தை தொடங்குகிறார். காங்கிரஸ் தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி.

தலையங்கம் மதுரை மணி
ஞாயிற்றுக்கிழமை 22.03.2026
விசுவாவசு தமிழ் வருடம்
பங்குனி மாதம் 08-ம் தேதி

# ரூபாய் மதிப்பு வரலாற்று சரிவு..!




மத்திய கிழக்கு பகுதியில் நடைபெறும் போர் தாக்கம் இந்திய பொருளாதாரத்திலும் தீவிரமாக பிரதிபலிக்கத் தொடங்கியுள்ளது. கச்சா எண்ணெய், எரிவாயு ஆகிய இரண்டுக்கும் வெளிநாட்டு ஆதாரங்களை மட்டுமே நம்பியிருக்கும் இந்தியாவுக்கு இந்த போரும், போர் மூலம் உருவாகியிருக்கும் எரிபொருள் சப்ளை செயின் பாதிப்பும் பெரும் நெருக்கடியாக மாறியுள்ளது. இன்றைய வர்த்தகத்தில் இந்திய ரூபாய், அமெரிக்க டாலருக்கு எதிராக வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு சரிந்து புதிய குறைந்த நிலையை எட்டியது. இந்திய ரூபாய் மதிப்பு 92 என்ற மோசமான அளவை கடந்து 93 அளவை தொட்டு தற்போது 93.37 ரூபாய் என்ற படுமோசமான நிலைக்கு வந்துள்ளது. இதற்கு முன் இந்திய ரூபாயின் குறைந்தபட்ச அளவாக 92.63 என்ற நிலை இருந்தது. தற்போது மொத்தமாக சரிந்து 93.37 ஆக குறைந்துள்ளது. மத்திய கிழக்கு பகுதியில் உருவான போர் சூழ்நிலை, உலகளாவிய எரிசக்தி விநியோகத்தை பாதித்துள்ளது. குறிப்பாக வளைகுடா நாடுகளில் உள்ள முக்கிய எண்ணெய் மற்றும் எரிவாயு உள்கட்டமைப்புகள் தாக்கப்பட்டதால், கச்சா எண்ணெய் விலை தாறுமாறாக உயர்ந்துள்ளது. ஒரு கட்டத்தில் ஒரு பேரலுக்கு $120 வரை சென்ற எண்ணெய் விலை, உலக பொருளாதாரத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்த உயர்வு இந்தியாவைப் போன்ற எண்ணெய் மற்றும் எரிவாயு இறக்குமதி சார்ந்த நாடுகளுக்கு நேரடி பாதிப்பை ஏற்படுத்துகிறது. இது பணவீக்கம் அதிகரிக்கும் அபாயத்தையும், ஜிடிபி வளர்ச்சியை மந்தமாக்கும் சூழ்நிலையையும் உருவாக்குகிறது. இதோடு இந்திய சந்தையில் இருந்து முதலீட்டை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வெளியேற்றி வருகின்றனர். இதன் காரணமாகவும் இந்திய ரூபாய் மதிப்பு கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது.

போர் தொடங்கியதிலிருந்து ரூபாய் மதிப்பு சுமார் 2% வரை குறைந்துள்ளது. இந்த காலத்தில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இந்திய பங்குகளில் இருந்து 8 பில்லியன் டாலருக்கும் மேல் பணத்தை வெளியேற்றியுள்ளது. இது ஜனவரி 2025க்கு பிறகு காணப்படும் மிகப்பெரிய மாதாந்திர முதலீட்டு வெளியேற்றமாகும். Strait of Hormuz வழியாக எண்ணெய் கப்பல்கள் பாதுகாப்பாக செல்லும் வகையில் ஐரோப்பிய நாடுகளும் ஜப்பானும் இணைந்து நடவடிக்கை எடுக்க முன்வந்துள்ளன. அதேபோல், அமெரிக்காவும் எண்ணெய் விநியோகத்தை அதிகரிக்கும் முயற்சிகளை அறிவித்துள்ளது. இந்த நடவடிக்கைகள் சந்தையில் நிலைத்தன்மையை ஏற்படுத்தும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டாலும், உடனடி தீர்வு கிடைப்பது சாத்தியமில்லை என நிபுணர்கள் கருதுகின்றனர்.

# EPFO 3.0: ரூ.5 லட்சம் வரை ஈஸியா கிளைம் செய்யலாம்! பிஎஃப் சந்தாதாரர்களுக்கு இன்னும் பல குட் நியூஸ்!

புதுடெல்லி, மார்ச். 22–

மத்திய அரசின் டிஜிட்டல் புரட்சியால், EPFO 3.0 இப்போது புதிய அவதாரம் எடுத்துள்ளது. பிஎஃப் சந்தாதாரர்களின் நீண்டகால புகார்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், மத்திய அரசு EPFO 3.0 என்ற பிரம்மாண்ட டிஜிட்டல் மாற்றத்தை கொண்டு வந்துள்ளது. இது குறித்து மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை இணை அமைச்சர் ஷோபா கரந்தலாஜே விரிவாக விளக்கமளித்துள்ளார்.

EPFO 3.0 என்பது வெறும் தொழில்நுட்ப மாற்றம் மட்டுமல்ல, இது பிஎஃப் சேவைகளை பேப்பர் லெஸ் மற்றும் அதிவேகமாக மாற்றும் ஒரு திட்டமாகும். மேலும் இனி ஊழியர்கள் தங்கள் பிஎஃப் மற்றும் பென்ஷன் கணக்குகளை ஒரே தளத்தில் எளிதாக நிர்வகிக்கலாம். எல்லாவற்றுக்கும் மேலாக பிஎஃப் பணத்தை மாற்றவோ அல்லது எடுக்கவோ இனி பழைய நிறுவனங்களின் கையெழுத்துக்காக காத்திருக்க வேண்டிய அவசியமில்லை.

**EPFO 3.0 – நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய 5 முக்கிய அம்சங்கள்:**

1. ரூ.5 லட்சம் வரை தானியங்கி தீர்வு: இதுதான் பிஎஃப் வரலாற்றிலேயே மிகப்பெரிய மாற்றம். முன்பு 1 லட்சம் ரூபாய் வரை மட்டுமே இருந்த ஆட்டோ–செட்டில்மென்ட் வரம்பு, இப்போது 5 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மருத்துவ அவசரம், கல்வி அல்லது திருமணத்திற்காக நீங்கள் கோரும் பணம், எந்த அதிகாரியின் தலையீடும் இன்றி தானாகவே செட்டில் செய்யப்படும்.

2. பிஎஃப் டிரான்ஸ்பர் ஆட்டோமேட்டிக்:

நீங்கள் வேலை மாறும்போது, பழைய பிஎஃப் கணக்கில் உள்ள பணத்தை, புதிய கணக்கிற்கு மாற்ற இனி விண்ணப்பிக்க தேவையில்லை. ஆட்டோ டிரான்ஸ்பர் முறை மூலம் உங்கள் பணம் தானாகவே புதிய கணக்கிற்கு மாறிவிடும். 2026 பிப்ரவரி வரை மட்டும் சுமார் 70.5 லட்சம் கணக்குகள் இவ்வாறு மாற்றப்பட்டுள்ளது.




3. மையப்படுத்தப்பட்ட பென்ஷன் முறை (CPPS):

ஜனவரி 2025 முதல் அமல்படுத்தப்பட்டுள்ள Centralised Pension Pay–ment System மூலம், சுமார் 70 லட்சம் ஓய்வூதியதாரர்கள் இந்தியாவின் எந்த ஒரு வங்கி கிளையிலிருந்தும் தங்களின் பென்ஷனை எவ்வித தாமதமும் இன்றி பெற முடியும்.

4. பிஎஃப் வித்டிராயல் கார்டு மற்றும் UPI வசதி;

விரைவில் பிஎஃப் கணக்குடன் இணைக்கப்பட்ட ஏடிஎம் கார்டுகள் அல்லது UPI மூலம், உங்கள் சேமிப்பில் ஒரு பகுதியை அவசரத் தேவைக்கு நேரடியாக எடுத்துக் கொள்ளும் வசதி வரவுள்ளது. இதற்கான சாப்ட்வேர் சோதனைகள் தற்போது இறுதி கட்டத்தில் உள்ளன.


5. ஆன்லைனில் நீங்களே திருத்தம் செய்யலாம்:

உங்களுடைய பெயர், பிறந்த தேதி அல்லது திருமண நிலை போன்ற விவரங்களில் தவறு இருந்தால், நிறுவனத்தின் ஒப்புதல் இன்றி ஊழியர்களே நேரடியாக ஆன்லைன் மூலம் (OTP Verification) திருத்தம் செய்து கொள்ளலாம். கடந்த ஓராண்டில் மட்டும் 32 லட்சத்திற்கும் அதிகமானோர் இந்த வசதியை பயன்படுத்தி உள்ளனர். குறைந்த ஆவணங்கள், அதிவேகத் தீர்வுகள் என்பதே EPFO 3.0–ன் முக்கிய அம்சமாக உள்ளது. 2026–ம் ஆண்டின் பாதியில் இது முழுமையாகச் செயல்பாட்டு க்கு வரும் போது, பிஎஃப் அலுவலகங்களுக்கு செல்லும் தேவையே இருக்காது.

# எல்பிஜி லோடு ஏற்றிய மேலும் ஒரு சரக்கு கப்பல் இந்தியா வந்தது!

புதுடெல்லி,மார்ச். 22–

மேற்கு ஆசியாவில் பதற்றம் நிலவி வரும் நிலையில், அமெரிக்காவின் டெக்சாஸிலிருந்து எல்பிஜி எரிவாயு சரக்கு கப்பல் 'பைக்ஸிஸ் பயோனியர் 'மங்களூரு துறைமுகம் வந்தடைந்தது. ஈரான் மீதான அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் தாக்குதலை தொடர்ந்து, மத்திய கிழக்காசியாவில் போர் பதற்றம் நிலவி வருகிறது. தாக்குதலுக்கு பதிலடி கொடுத்து வரும் ஈரான், ஹார்முஸ் ஜலசந்தியை முடக்கி, உலக நாடுகளையே ஸ்தம்பிக்க வைத்து விட்டது. இந்த ஜலசந்தி சர்வதேச அளவில் எண்ணெய் வர்த்தகத்தின் முக்கிய நீர்வழிப் போக்குவரத்தாக திகழ்வதால், கச்சா எண்ணெய் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.



நீடித்து வரும் போர், இந்தியாவுக்கான எரிசக்தி விநியோகத்தைப் பாதித்தது. இதன் விளைவாக, வீடுகளின் சமையலறைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில், ஹோட்டல்கள் போன்ற வணிக நிறுவனங்களுக்கான எல்பிஜி விநியோகம் ஆரம்பத்தில் குறைக்கப்பட்டது. ஆனாலும் எல்பிஜி தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என்ற கவலைகளுக்கு மத்தியில், அமெரிக்காவிலிருந்து எல்பிஜி எரிவாயு சரக்கு கப்பல் ஒன்று இந்தியாவை வந்தடைந்துள்ளது.


47,236 டன் மொத்த எடை கொண்ட, எண்ணெய்க் கப்பல், காலை 6 மணியளவில் மங்களூரு துறைமுகம் வந்தடைந்தது. இந்தக் கப்பல் 'பைக்ஸிஸ் பயோனியர் ', பிப்ரவரி 14ம் தேதி டெக்சாஸிலிருந்து புறப்பட்ட நிலையில் தற்போது இந்தியா வந்து சேர்ந்துள்ளது. தற்போது நீடிக்கும் தட்டுப்பாடுகளை சமாளிக்க இந்த கப்பலில் உள்ள எல்பிஜி எரிவாயு உதவியாக இருக்கும் என துறைமுக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# திருப்பரங்குன்றம் முருகன் கோவில் பங்குனி திருவிழா கொடியேற்றத்துடன் தொடக்கம்!

மதுரை, மார்ச்,. 22–

திருப்பரங்குன்றம் முருகன் கோவிலில் கொண்டாடப்படும் திருவிழாக் களில் பங்குனி பெருவிழா சிறப்பு வாய்ந்ததாகும். இந்த திருவிழா ஆண் டுதோறும் 15 நாட்கள் வெகு விமரிசையாக நடைபெறும். இந்த ஆண்டு விழா மார்ச். 23–ல் (திங்கட்கிழமை) கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. 6–ந் தேதி வரை 15 நாட்கள் விழா கோலாகலமாக நடக்கிறது.

திருவிழாவை முன்னிட்டு தினமும் காலையிலும், இரவிலுமாக பல்வேறு வாகனங்களில் தெய்வானையுடன் முருகப்பெருமான் எழுந்தருளி நகரின் முக்கிய வீதிகளில் உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார். வருகிற 28–ந் தேதி கைப்பாரம் நிகழ்ச்சி நடக்கிறது. இதில் கோவிலில் உள்ள வாகனங்களிலேயே அதிக எடை கொண்ட வெள்ளியிலான யானை வாகனத்தில் எழுந்தருளும் முருகப்பெருமான், தெய்வானையை பக்தர்களும், கோவில் சீர் பாதங்களும் கைப்பாரமாக சுமந்து செல்வது தனிச்சிறப்பாகும். இதையொட்டி பக்தர்களுக்கு பிரசாதமாக சந்தனம் வழங்கப்படும்.



1–ந்தேதி பங்குனி உத்திரம் அன்று ஏராளமான பக்தர்கள் காவடிகள் எடுத்து வந்து நேர்த்திக்கடன் செலுத்துகிறார்கள். 2–ந்தேதி சூரசம்ஹாரம் நடைபெறுகிறது. சிறப்பு நிகழ்ச்சியாக 3–ந்தேதி முருகப்பெருமானுக்கு தங்க கீரிடம் சூட்டி நவரத்தினங்களாலான செங்கோல் வழங்கி பட்டாபி ஷேகம் நடக்கிறது. திருவிழாவின் முத்தாய்ப்பாக 4–ந்தேதி முருகப்பெருமான் – தெய்வானை யின் திருக்கல்யாணம் நடக்கிறது. அப்போது மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் இருந்து மீனாட்சியம்மன், பிரியாவிடையுடன் சுந்தரேசுவரர் வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றனர். சிகர நிகழ்ச்சியாக 5–ந்தேதி தேரோட்டம் நடக்கிறது. 6–ந் தேதி தீர்த்த உற்சவம் நடக்கிறது.

# இந்திய ராணுவத்திற்கான செயற்கைக்கோள் சேவைகளை மேம்படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம்: இஸ்ரோ விஞ்ஞானிகள் தகவல்!

சென்னை, மார்ச் . 22–

இந்திய ராணுவத்திற்கான செயற்கைக்கோள் அடிப்படையிலான சேவைகளை மேம்படுத்துவதற்காகவும், பாதுகாப்புத் தகவல் தொடர்பு அமைப்புகளை வலுப்படுத்தும் நோக்கிலும் இந்தியா மற்றொரு முக்கிய நடவடிக்கையை எடுத்துள்ளது.

அதன்படி, டெல்லியிலுள்ள தலைமையக ஒருங்கிணைந்த பாதுகாப்புப் படை மற்றும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவ னத்தின் (இஸ்ரோ) கீழ் ஆமதாபாத்தில் செயல்படும் விண்வெளிப் பயன்பாட்டு மையம் (எஸ்.ஏ.சி.) ஆகியவை ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை (எம்.ஓ.யு.) தயாரித்தது.




அதில், ஒருங்கிணைந்த பாதுகாப்புப் படையின் துணைத் தலைவர் ஏர் மார்ஷல் சங்கர் சுப்ரமணியன், விண்வெளிப் பயன்பாட்டு மையத்தின் (இஸ்ரோ) இயக்குனர் நிமேஷ் எம். தேசாய் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர். தேசியப் பாதுகாப்பு மற்றும் செயல் பாட்டுத் திறனுக்காக விண்வெளித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் இந்தியாவின் அதிகரித்து வரும் கவனத்தை இந்த ஒப்பந்தம் நிரூபிக்கிறது.

தற்போதுள்ள செயற்கைக்கோள் அடிப்படையிலான தொலைத்தொடர்பு முனைகளைப் பராமரித்தல், ஆயுதப் படைகளுக்கான புதிய தகவல் தொடர்பு முனைகளை உருவாக்குதல், பாதுகாப்பான மற்றும் நம்பகமான தகவல் தொடர்பு அமைப்புகளை வலுப்படுத்துதல், தொலை மருத்துவ சேவைகளை மேம்படுத்துவது போன்றவை இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நோக்கமாக கொண்டுள்ளது.

இந்த நடவடிக்கை மூலம், இந்திய ஆயுதப்படைகள், குறிப்பாக தொலைதூர மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில், தடையற்ற தகவல் தொடர்பைப் பராமரிக்க உதவும். நவீன போர் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் செயற்கைக்கோள் தகவல் தொடர்பு ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது.

அத்துடன், தற்போதுள்ள உள்கட்டமைப்பு மேம்படுத்தப்படும். தகவல் தொடர்பு நம்பகத்தன்மை மேம்படும். தற்சார்பை ஊக்குவிக்கிறது. உள்நாட்டு இஸ்ரோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது. வெளிநாட்டு அமைப்புகளைச் சார்ந்திருப்பதைக் குறைக்கிறது என்று இஸ்ரோ விஞ்ஞா னிகள் கூறினர்.

# கொடைக்கானல் மலைப்பகுதியில் பயங்கர காட்டுத்தீ!



திண்டுக்கல், மார்ச். 22–

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் மேல்மலை பகுதியான பூம்பாறை அருகே மலைப்பகுதியில் உள்ள தனியார், அரசு வருவாய் நிலங்களில் நேற்று இரவு பயங்கர காட்டுத்தீ ஏற்பட்டது. இதனால் அப்பகுதி முழுவதும் கரும்புகை மூட்டமாக காட்சியளித்தது. அத்துடன் அருகில் உள்ள வனப்பகுதிக்கும் தீ பரவும் அபாயம் உருவானது.

இதையடுத்து வனத்துறையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று தீயை அணைக்கும் பணியில் தீவிர மாக ஈடுபட்டு வருகின்றனர். இருப்பினும் வரும் நாட்களில் இதுபோன்று காட்டுத்தீ ஏற்படாமல் தடுக்க வனத்துறையினர் முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


# 10 'சீட்'டுக்கு குறைவாக பெற்றால் பதவி விலகுவோம்: தே.மு.தி.க.,வில் 'திடீர்' போர்க்குரல்!



சென்னை, மார்ச். 22–

'தி.மு.க., கூட்டணியில், 10 'சீட்'களுக்கு குறைவாக பெற்றால், பதவி விலகுவோம்' என, தே.மு.தி.க., மாவட்டச்செயலர்கள் போர்க்கொடி உயர்த்தியுள்ளனர்.

தி.மு.க., கூட்டணியில் , சமீபத்தில் இணைந்த தே.மு.தி.க.,வுக்கு ராஜ்யசபா எம்.பி., 'சீட்' வழங்கப்பட்டது. ஆனால், அக்கட்சிக்கு எத்தனை சட்டசபை தொகுதிகள் தரப்படும் என்பதை, தி.மு.க., உறுதி செய்யவில்லை. இந்நிலையில், எட்டு தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளதாக தகவல் பரவும் நிலையில், 10 தொகுதிகள் வரை பெறாவிட்டால், பதவி விலகப் போவதாக, சில மாவட்டச் செயலர்கள் போர்க்கொடி உயர்த்தியுள்ளனர்.



# மீண்டும் மீண்டும் ஒரே பிரச்சனையை நாம் சந்திப்பதற்கு பின் இருக்கும் ஜோதிட காரணங்கள்!



நம் வாழ்க்கையில் நாம் அடிக்கடி எதிர்கொள்ளும் ஒரு சில பிரச்சனைகளுக்கும், கிரக நிலை மாற்றங்களுக்கும் நெருக்கமான தொடர்பு இருப்பதாக வேத ஜோதிட குறிப்புகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக கிரகங்களின் நீதிபதி என அழைக்கப்படும் சனி கிரகம், நிழல் கிரகங்களாக கருதப்படும் ராகு, கேது ஆகிய கிரகங்களின் நிலைபாடு ஆனது நம் வாழ்க்கையில் இத்தகைய தொடர்ச்சியான பிரச்சனைகளை கொண்டு வரலாம் என நம்பப்படுகிறது. தனி நபரின் வாழ்க்கையில் எதிர்மறையான விளைவுகளை கொண்டு வரும் இந்த கிரக நிலை மாற்றங்கள் குறித்தும், அதன் விளைவாக உண்டாகும் பிரச்சனைகள் குறித்தும் சற்று விரிவாக நாம் காணலாம்!

**ராகு அல்லது கேதுவுடன் சனி இணைந்து இருப்பது!**

நிழல் கிரகங்களாக குறிக்கப்படும் ராகு அல்லது கேதுவுடன் சனி இணையும் போது, நம் வாழ்க்கை நமது கர்ம வினைகளின் அடிப்படையில் கலவையான பலன்களை காணுகிறது. நன்மை – தீமை என இரண்டையும் நம் கர்ம வினைகளின் அடிப்படையில் அளிக்கும் இந்த 'கிரக சேர்க்கை', கெடு பலன்களை தொடர்ச்சியாக அளிப்பது போன்று தோண்றுகிறது. நிபுணர்கள் பார்வையில் இந்த பலன்கள், உங்கள் தவறுக்கான பாடத்தை நீங்கள் கற்கும் வரை (தவறுகளை புரிந்து, அதனை திருத்திக்கொள்ளும் வரையில்) உங்கள் வாழ்க்கையில் தொடரும்.

பரிகாரம்: ராகு அல்லது கேதுவுடன் சனி இணைவதால் உருவாகும் பிரச்சனைகளை சமாளிக்க, சனிக்கிழமைகளில் 'ஓம் சம் சனைச்சராய நமஹ' மற்றும் 'ஓம் ராம் ராகவே நமஹ' எனும் மந்திரங்களை தினமும் உச்சரித்து வரலாம்.

**ஏழாவது வீட்டில் யுரேனஸ்!**

தனி ஒரு நபரின் ஜாதகத்தில் 7–வது வீட்டில் யுரேனஸ் இடம்பெற, கூட்டாண்மை தொடர்பான பிரச்சனைகளை அடிக்கடி எழும். தொழில் வாழ்க்கையில் அமைக்கப்படும் கூட்டாண்மை மட்டும் அல்ல, குடும்ப வாழ்க்கையில் கணவன் – மனைவி இடையேயான கூட்டணியும் அடிக்கடி பிரச்சனைகளை சந்திக்கும். திருமணத்தை முடிப்பதிலும் தடைகள் நீடிக்கும்; கூட்டு முயற்சியில் செய்யும் பணிகள் சவாலாக மாறலாம், எதிர்பார்த்த பலன்களை கொண்டு வருவதில் சிரமங்கள் நீடிக்கலாம். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் சந்திக்கும் இந்த பிரச்சனைகளை தவிர்க்க அல்லது தீர்வு காண, பிரச்சனைக்கு பின் இருக்கும் காரணத்தை புரிந்து செயல்படுவது அவசியம்.

**ராகு அல்லது கேதுவுடன் சூரியன் இணைவது!**

தனி ஒருவரின் ஜாதகத்தில் சூரியனுடன் ராகு அல்லது கேது இணைவது, ஜாதகத்திற்கு உரியவரின் உரிமைகளை கேள்விக்குறியாக மாற்றும். அவருக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளை தடுப்பதோடு, அவர்களின் திறமைக்கான அங்கீகாரம், வெகுமதிகள் கிடைப்பதிலும் சிக்கலை உண்டாக்கும். அவர்களின் கடின உழைப்புக்கான பலன் கிடைப்பதில் கால தாமதம் நீடிக்கும், குழப்பங்கள் அதிகரிக்கும். பணியிடத்தில் பிரச்சனைகள் தொடர்ச்சியாக இருக்கும், உங்கள் கருத்துக்களை தைரியமாக வெளிப்படுத்துவதில் சிக்கல் காணப்படும்.

பரிகாரம்: நிழல் கிரகங்களுடன் சூரியன் இணைவதால் காணப்படும் இந்த பிரச்சனைகளை சமாளிக்க சனிக்கிழமை விரதம் இருப்பது நல்லது. மேலும், விரத தினங்களில் இயலாதவர்களுக்கு அன்னதானம் வழங்குவது ராகுவின் தாக்கத்தை குறைத்து, மன நிறைவான வாழ்வுக்கு வழி காணலாம்!

(பொறுப்பு துறப்பு: பரிந்துரைக்கப்பட்ட பரிகாரங்கள் மத மற்றும் மரபு சார்ந்த நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டவை; அறிவியல் அடிப்படையில் அல்ல)

# ரூ. 4.51 கோடி தங்க கட்டி பறிமுதல்; பறக்கும் படை சோதனையில் சிக்கியது!



சிவகங்கை, மார்ச். 22–

சிவகங்கை மாவட்டம், எஸ்.எஸ்., கோட்டை சோதனை சாவடியில் நடந்த வாகன சோதனையில், மதுரையில் இருந்து கார்த்திகேயன் என்பவர் ஆவணம் இன்றி கொண்டு வந்த ரூ. 4.51 கோடி தங்க கட்டி பறிமுதல் செய்யப்பட்டது.

தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்துள்ள நிலையில், சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட எஸ்.எஸ்., கோட்டை சோதனை சாவடியில் தேர்தல் பறக்கும் படை குழுவினர் வாகன சோதனையில் ஈடுபட்டு இருந்தனர். நிலையான கண்காணிப்பு குழுவைச் சேர்ந்த கல்லல் பி. டி. ஓ., பாலமுருகன் தலைமையில் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது காரில், உரிய ஆவணங்கள் இல்லாமல், ரூ. 4.51 கோடி மதிப்புள்ள தங்க கட்டிகள் எடுத்துச்செல்வது கண்டறியப்பட்டு, பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர். விசாரணையில், மதுரையை சேர்ந்த மாயாண்டி மகன் கார்த்திகேயன் என்பவர் தெரியவந்தது. இவர் மதுரையில் இருந்து தங்க கட்டிகளுடன் காரில் சென்று கொண்டிருந்த போது, சோதனை சாவடியில் பறக்கும் படை ஆய்வில் சிக்கியது தெரியவந்துள்ளது. கைப்பற்றப்பட்ட தங்க கட்டிகள் திருப்பத்தூர் கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.




## கொழுப்பு கல்லீரல் பிரச்சனை: தவிர்க்க வேண்டிய, சேர்க்க வேண்டிய உணவுகள்!



இன்றைய காலகட்டத்தில் கொழுப்பு கல்லீரல் பிரச்சனை பலரிடம் காணப்படுகின்றது. கொழுப்பு கல்லீரல் நோய் என்பது கல்லீரல் நார்ப்பெருக்கம் அல்லது சிரோசிஸுக்கு வழிவகுக்கும் ஒரு தீவிரமான நிலையாகும். கொழுப்பு கல்லீரல் பிரச்சினை சரியான நேரத்தில் கவனிக்கப்படா விட்டால், அது படிப்படியாக கல்லீரல் பாதிப்புக்கு வழிவகுத்து, கல்லீரல் செயலிழப்பு அபாயத்தையும் ஏற்படுத்தக்கூடும்.

கொழுப்பு கல்லீரலுக்கு சிகிச்சையளிக்க ஒருவர் என்னென்ன உணவுகளை உட்கொள்ள வேண்டும் என்பதை விளக்கி, டெல்லியின் வசந்த் குஞ் பகுதியில் உள்ள ஃபோர்டிஸ் மருத்துவமனையின் மூத்த இரைப்பை மற்றும் கல்லீரல் நிபுணரான டாக்டர் ஷுபம் வத்ஸ்யா, சமீபத்தில் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஒரு வீடியோவைப் பகிர்ந்துள்ளார். இந்த குறிப்பிட்ட உணவுகளை ஒருவரின் உணவில் சேர்த்துக்கொள்வது, கல்லீரலில் தேங்கியுள்ள கொழுப்பைக் கரைக்க உதவுவதோடு, மிகவும் திறமையான நச்சு நீக்க செயல்முறையை எளிதாக்குகிறது என்று அந்த மருத்துவர் கூறுகிறார். கொழுப்பு கல்லீரல் பிரச்சனை உள்ளவர்கள் தங்கள் டயட்டில் சேர்க்க வேண்டிய முக்கிய உணவுகள் பற்றி இந்த பதிவில் காணலாம்.

**பிளாக் காபி:**

கல்லீரல் ஆரோக்கியத்திற்கு பிளாக் காபி ஒரு சிறந்த பானம் என்று பல மருத்துவர்கள் குறிப்பிடுகிறார்கள். பல்வேறு ஆய்வுகளின்படி, தினமும் பிளாக் காபி அருந்துவது கல்லீரல் நொதிகளின் அளவை இயல்பாக்கவும், கல்லீரல் நார்ப்பெருக்க அபாயத்தைக் குறைக்கவும் உதவுகிறது. பிளாக் காபியில் உள்ள ஆன்டிஆக்ஸிடன்ட்கள் கல்லீரலைப் பாதுகாத்து, கொழுப்பு சேர்வதை மெதுவாக்க உதவுகின்றன.

**கீரை**

பச்சை இலைக் காய்கறிகள் எண்ணற்ற ஆரோக்கிய நன்மைகளை வழங்குகின்றன. குறிப்பாக, கல்லீரல் நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் கீரையை உட்கொள்வதை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். இதில் உள்ள நைட்ரேட்டுகள் மற்றும் பாலிஃபீனால்கள், கல்லீரல் கொழுப்பைக் குறைக்க நேரடியாகப் பங்களிக்கின்றன. கீரையைபல்வேறுவழிகளில்உணவில்சேர்த்துக்கொள்ளலாம்.

**பிரோக்கோலி**

கொழுப்பு கல்லீரல் நோயை நிர்வகிப்பதற்கும் குறைப்பதற்கும் பிரோக்கோலி ஒரு சிறந்த உணவுத் தேர்வாக இருக்கும். இதில் சல்ஃபோராஃபேன் என்ற சேர்மம் உள்ளது. இது இயற்கையாகவே கல்லீரலைப் பாதுகாக்கிறது. அதன் ஆன்டிஆக்ஸிடன்ட் பண்புகள் கல்லீரலைச் சுத்தப்படுத்த உதவுகின்றன.

கொழுப்பு கல்லீரல் உள்ள நோயாளிகள் உட்கொள்வதைத் தவிர்க்க வேண்டிய சில உணவுகளை பற்றி இங்கே காணலாம்:

சிவப்பு இறைச்சி: நிறைவுற்ற கொழுப்புகளை உட்கொள்வது கல்லீரலில் கொழுப்பு சேர்வதை அதிகரிக்க வழிவகுக்கும். எனவே, கொழுப்பு கல்லீரல் உள்ள நோயாளிகள் சிவப்பு இறைச்சி சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

சுத்திகரிக்கப்பட்ட தானியங்கள்: ரொட்டி, பாஸ்தா மற்றும் சுத்திகரிக்கப்பட்ட மாவில் இருந்து தயாரிக்கப்படும் பிற பொருட்கள் கொழுப்பு கல்லீரல் உள்ளவர்களுக்கு நன்மை அளிக்காது. ஆகையால், இந்த உணவுகளை ஒருவரின் உணவில் சேர்த்துக்கொள்ளக் கூடாது.

அதிக சர்க்கரை கொண்ட உணவுகள்: அதிக அளவு சர்க்கரையைக் கொண்ட உணவுப் பொருட்களை ஒருவரின் உணவில் சேர்த்துக்கொள்ளக் கூடாது. குறிப்பாக, அதிக சர்க்கரை சேர்க்கப்பட்ட உணவுகளைக் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும்.

அதிகப்படியான உப்பு: அதிக உப்புச்சத்து கொண்ட உணவுகளை உட்கொள்வதையும் தவிர்க்க வேண்டும். அதிக உப்புடைய உணவுகள், கொழுப்பு கல்லீரல் பாதிப்பை மேலும் தீவிரப்படுத்தக் கூடும்.

(பொறுப்பு துறப்பு: இந்தச் செய்தி உங்களுக்கு பல தகவல்களை வழங்குவதற்காக மட்டுமே எழுதப்பட்டுள்ளது. இதை எழுதுவதில் வீட்டு வைத்தியம் மற்றும் பொதுவான தகவல்களின் உதவியை நாங்கள் பெற்றுள்ளோம். இவற்றை பின்பற்றுவதற்கு முன் கண்டிப்பாக மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டும். இந்த தகவல்களை மதுரை மணி நாளிதழ்உறுதிப்படுத்தவில்லை.)



திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி அமைந்ததையொட்டி திமுக திருப்பூர் வடக்கு மாவட்டம், திருப்பூர் மாநகர செயலாளர் ஈ தங்கராஜ் அவர்களை தேமுதிகதிருப்பூர் மாநகர் மாவட்ட கழக செயலாளர் விசைத்தறி பி.ஆர்.குழந்தைவேல் அவர்கள் தலைமையில் கழக இளைஞர் அணி துணைச்செயலாளர் ராயபுரம் ஆனந்த் ,மாவட்ட கழக துணைச் செயலாளரும், திருப்பூர் வடக்கு சட்டமன்ற தொகுதி பொறுப்பாளருமான வசந்த் ஆர். யுவராஜ்.மாவட்ட இளைஞர் அணி செயலாளர் வஞ்சிநகர் கே.கணேசன் 15–வேலம்பாளையம் பகுதி கழக செயலாளர் வி.ஆனந்த்,குமார் நகர் பகுதி கழக செயலாளர் கே.சண்முகராஜா மற்றும் கழக நிர்வாகிகள் நேரில் சந்தித்தனர்.

## மெகா இன்பச்செய்தி..! இரட்டிப்பாகும் அரசு ஊழியர்களின் சம்பளம்!




புதுடெல்லி, மார்ச். 22–

மத்திய அரசு ஊழியர்கள் அனைவரும் தற்போது 8–வது ஊதியக் குழுவையும் (8th Pay Commission), அதன் 'பொருத்தக் காரணியையும்' (Fitment Factor) ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். புதிய ஊதியம், ஓய்வூதியம் மற்றும் இதர நிலுவைத் தொகைகள் எவ்வளவு அதிகரிக்கும் என்பதை இந்தக் காரணியே தீர்மானிக்கிறது. பொருத்தக் காரணியில் கணிசமான உயர்வு ஏற்பட்டால், அது ஊழியர்களுக்குப் பெரும் நன்மைகளைக் கொண்டு வரும் என்று ஊழியர் சங்கங்கள் கருதுகின்றன.

பொருத்தக் காரணி என்பது ஒரு 'பெருக்கி' (multiplier) ஆகும். தற்போதைய அடிப்படை ஊதியத்துடன் இந்தக் காரணியைப் பெருக்கி, புதிய ஊதியத்தைக் கணக்கிட இது பயன்படுத்தப்படுகிறது. 7–வது ஊதியக் குழுவின்போது, இந்தக் காரணியின் மதிப்பு 2.57 என நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது, இந்தக் காரணியின் மதிப்பை 3.0–லிருந்து 3.25 வரை உயர்த்த வேண்டும் என்று ஊழியர் சங்கங்கள் கோரிக்கை விடுத்து வருகின்றன. கடந்த பத்து ஆண்டுகளில் அதிகரித்துள்ள பணவீக்கம் மற்றும் வாழ்க்கைச் செலவினங்களைக் கருத்தில் கொண்டு ஊதியத்தை உயர்த்த வேண்டும் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பாகும்.

பொருத்தக் காரணியை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னதாக, அகவிலைப்படியை (DA) அடிப்படை ஊதியத்துடன் இணைத்துக்கொள்வது மிகவும் முக்கியமாகும். அகவிலைப்படி அதிகமாக இருந்தால், அடிப்படை ஊதியத்தின் மதிப்பும் அதிகரிக்கும். இதன் விளைவாக, புதிய ஊதியத் தொகையும் உயரும். மாறாக, அகவிலைப்படி குறைவாக இருந்தால், புதிய பொருத்தக் காரணியின் மூலம் கிடைக்க க்கூடிய நன்மைகளும் குறைவாகவே இருக்கும்.

**ஊதியம் எவ்வளவு அதிகரிக்கும்?**

8–வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டால், ஊழியர்கள் 12 முதல் 24 மாதங்களுக்கான நிலுவைத் தொகையை (Arrears) ஒரே தவணையாகப் பெறும் வாய்ப்புள்ளது. பழைய ஊதியத்திற்கும் புதிய ஊதியத்திற்கும் இடையிலான வித்தியாசத்தின் அடிப்படையில் இந்த நிலுவைத் தொகைகள் கணக்கிடப்படுகின்றன.

ஊதிய நிலைகளின் (Pay Levels) மீதான தாக்கம் என்னவாக இருக்கும்?

நிலை 1 (அடிப்படை ஊதியம் ரூ. 18,000): இவர்களின் ஊதியம் ரூ. 36,000 முதல் ரூ. 46,260 வரை உயரக்கூடும்.

நிலை 6 (அடிப்படை ஊதியம் ரூ. 35,400): இவர்களின் ஊதியம் ரூ. 70,800 முதல் ரூ. 90,978 வரை இருக்கக்கூடும்.

நிலை 8 (அடிப்படை ஊதியம் ரூ. 47,600): இவர்களின் ஊதியம் ரூ. 1.22 லட்சத்தைத் தாண்டக்கூடும்.

புதிய ஊதிய விகிதங்கள் 2026–ஆம் ஆண்டு ஜனவரி 1–ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது, 18 முதல் 24 மாதங்கள் அல்லது அதற்கும் அதிகமான காலத்திற்கான நிலுவைத் தொகையானது ஒரே தவணையாக வழங்கப்படவுள்ளது. நிலை 1 ஊழியர்கள் ரூ. 3.6 லட்சம் வரையிலும், நிலை 8 ஊழியர்கள் ரூ. 14 முதல் 15 லட்சம் வரையிலும் நிலுவைத் தொகையைப் பெறக்கூடும்.

தொழிற்சங்கங்களின் முக்கியக் கோரிக்கைகள்:

குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை 3–லிருந்து 5–ஆக உயர்த்தப்பட வேண்டும்.

மாத ஊதியத்தில் கணிசமான உயர்வு இருக்க வேண்டும்.

'Fitment factor' (ஊதிய நிர்ணயக் காரணி) 3.0 முதல் 3.25 வரையிலான வரம்பிற்குள் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

கையில் பெறும் ஊதியம் (Take–home salary) கணிசமாக அதிகரிக்க வேண்டும்.

தேசிய கவுன்சில் கூட்டு ஆலோசனைக் குழுவும் (National Council Joint Consultative Machinery) விரைவில் தங்கள் கோரிக்கைகளை ஆணையத்திடம் சமர்ப்பிக்கவுள்ளது. தொழிற்சங்கங்கள் முன்மொழிந்துள்ளவாறு, 'பொருத்தக் காரணி 3.0 அல்லது அதற்கு மேலாக நிர்ணயிக்கப்பட்டால், அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் மாத ஊதியம் மற்றும் நிலுவைத் தொகையில் மிகப்பெரிய மாற்றம் ஏற்படும். இது ஒரு நிதிசார் நன்மையாக மட்டுமல்லாமல், ஊழியர்களின் வாழ்க்கைத்தரத்தையும் மேம்படுத்தும். அரசாங்கம் தற்போது பேச்சுவார்த்தை நிலையில் உள்ளது. இதற்கான இறுதி ஒப்புதல் மற்றும் அமலாக்கத்திற்கு ஓராண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காலம் ஆகலாம். இந்த மாற்றம் லட்சக்கணக்கான ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் ஊதியத்தில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும்.

## அனைத்து பள்ளிகளிலும் நாப்கின், டாய்லெட், மாதவிடாய் சுகாதார மையங்கள் இருக்க வேண்டும்.. சி.பி.எஸ்.இ. அறிவுறுத்தல்..!



சென்னை, மார்ச். 22–

கண்ணியமான மாதவிடாய் சுகாதாரத்திற்கான உரிமை என்பது, வாழ்வதற்கான உரிமையின் ஒரு அடிப்படைப் பகுதி என்று சமீபத்தில் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.. இந்த உத்தரவைத் தொடர்ந்து, மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (சிபிஎஸ்இ) தனது கீழ் இயங்கும் அனைத்துப் பள்ளிகளுக்கும் ஒரு தொகுதி மாதவிடாய் சுகாதார நடவடிக்கைகளைச் செயல்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளது.

மார்ச் 18 அன்று வெளியிடப்பட்ட ஒரு சுற்றறிக்கையில், வளரிளம் பெண்களுக்குக் கல்விக்கான சமமான அணுகலை உறுதி செய்வதற்கு மாதவிடாய் சுகாதார மேலாண்மை (MHM) அவசியம் என்பதை அங்கீகரித்த உச்ச நீதிமன்றத்தின் ஜனவரி 20 தீர்ப்பைக் கல்வி அமைச்சகம் பகிர்ந்து கொண்டதாக சிபிஎஸ்இ பள்ளிகளுக்குத் தெரிவித்தது. இந்திய அரசியலமைப்பின் 21வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட தனது வழிகாட்டுதல்களில், முறையான வசதிகள் இல்லாதது பெரும்பாலும் பள்ளிகளில் வருகைக்கும் பங்கேற்புக்கும் ஒரு தடையாக அமைகிறது என்பதை நீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது. அடிப்படை உள்கட்டமைப்பை உறுதி செய்யுமாறு பள்ளிகளுக்கு அறிவுறுத்தல்

பள்ளிகள் பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான உள்கட்டமைப்பை வழங்க வேண்டும்

பெண்களுக்குத் தனி கழிப்பறை மற்றும் கழுவும் வசதிகள் கட்டாயமாகும்

மக்கும் தன்மையுள்ள சானிட்டரி நாப்கின்கள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்

வளாகத்தில் மாதவிடாய் சுகாதார மேலாண்மைக் (MHM) பிரிவுகளை அமைக்க வேண்டும் விழிப்புணர்வு மற்றும் பொறுப்பான முறையில் கழிவுகளை அகற்றுவதில் கவனம்

இந்தச் சுற்றறிக்கை, சுகாதாரக் கழிவுகளை முறையாக அகற்றும் முறைகளை வலியுறுத்திய நிலையில், சுற்றுச்சூழலுக்குப் பொறுப்பான நடைமுறைகளின் அவசியத்தை எடுத்துரைக்கிறது.

பௌதீக உள்கட்டமைப்புடன் கூடுதலாக, விழிப்புணர்வு இடைவெளிகளைக் களைய பள்ளிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மன்றம் (NCERT) வகுத்துள்ள வழிகாட்டுதல்களின்படி, மாதவிடாய் சுகாதாரம் மற்றும் பருவமடைதல் குறித்த அமர்வுகளை நடத்துவதோடு, பாலினம் தொடர்பான பிரச்சினைகளுக்கும் வழிவகை செய்ய வேண்டும் எனவும் பள்ளிகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

இந்த நடவடிக்கைகள் வெறும் காகிதத்தில் மட்டும் நின்றுவிடாமல் இருப்பதை உறுதிசெய்ய, மாவட்டக் கல்வி அதிகாரிகளால் நடத்தப்படும் காலமுறை ஆய்வுகளுக்குப் பள்ளிகள் ஒத்துழைக்க வேண்டும் என்று சிபிஎஸ்இ கூறியுள்ளது. மேலும், கல்வி நிறுவனங்கள் மாதாந்திர அடிப்படையில் இணக்க அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும், அதற்கான காலக்கெடு மார்ச் 31 மற்றும் ஏப்ரல் 30 ஆகும்.

## அமெரிக்காவின் அச்சுறுத்தலை எதிர்கொள்ள தயார்; கியூபா அதிபர் அறிவிப்பு!



கியூபா, மார்ச். 22–

"அமெரிக்காவின் எத்தகைய அச்சுறுத்தலையும் எதிர்கொள்ள தயார்" என கியூபா அதிபர் மிகெல் டியாஸ் கானெல் தெரிவித்து உள்ளார்.

வெனிசுலாவில் இருந்து கியூபாவுக்கு கச்சா எண்ணெய் வழங்குவதை அமெரிக்க தடை செய்துள்ளது. இதனால், கடுமையான பொருளாதார நெருக்கடியுடன், மின்வெட்டு, எரிபொருள் தட்டுப்பாட்டு கியூபாவில் நிலவுகிறது. கியூபா மீதான தடைகளை நீக்க வேண்டுமானாலும், அதிபர் மிகெல் டியாஸ் கானெலைப் பதவியில் இருந்து விலக்க வேண்டுமென அமெரிக்கா நிபந்தனை விதித்துள்ளது. 'கியூபா ஒரு மிகப்பெரிய பேரழிவில் உள்ளது. அங்குள்ள மக்கள் கஷ்டத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். வெனிசுலாவில் நாம் மேற்கொண்ட நடவடிக்கையால், அந்நாடு தற்போது சிறப்பாக உள்ளது. அதேபோன்று, கியூபாவையும் நாம் மிக எளிதாக விடுவிக்க அல்லது நம் வசப்படுத்த முடியும்' என அதிபர் டிரம்ப் கூறியிருந்தார்.

முன்பு, வெனிசுலா வில் அதிபர் நிக்கோலஸ் மதுரோவை நீக்கிவிட்டு சாதகமான ஒரு ஆட்சியை ஏற்படுத்த அமெரிக்கா நடவடிக்கை எடுத்தது போல, அடுத்து அமெரிக்காவின் குறி கியூபாவாக மாறியுள்ளதாக அரசியல் நிபுணர்கள் கருதுகின்றனர்.

இந்நிலையில் கியூபா அதிபர் மிகெல் டியாஸ் கானெல் கூறியதாவது: நாங்கள் கைகளை கட்டிக் கொண்டு வேடிக்கை பார்க்கப் போவது இல்லை. அமெரிக்காவின் எந்தொரு அச்சுறுத்தலையும் எதிர்கொள்ள தயார். கியூபாவை தாக்கவோ, ஆக்கிரமிக்கவோ முயன்றால் கடுமையான பதிலடி தரப்படும். இவ்வாறு மிகெல் டியாஸ் கானெல் கூறினார். இது குறித்து கியூபா வெளியுறவுத்துறை துணை அமைச்சர் கார்லோஸ் பெர்னாண்டஸ் டி கோசியோ கூறியதாவது: கியூபாவின் அரசியல் அமைப்புமுறை பேச்சுவார்த்தைக்கு உட்பட்டதல்ல, நிச்சயமாக கியூபாவின் அதிபரையோ அல்லது எந்தவொரு அதிகாரியின் பதவியோ அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தைக்கு உட்பட்டதல்ல என்பதை என்னால் திட்டவட்டமாக உறுதிப்படுத்த முடியும்,' என்றார்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881

## வேலை வாய்ப்பு
## சென்னை மாநகராட்சி 20 காலிப்பணியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: பெருநகர சென்னை மாநகராட்சி
பணி வகை: தமிழ்நாடு அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: ஒப்பந்த அடிப்படையில்
கால அளவு: 12 மாதங்கள் மட்டும்
மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 20 பூங்கா மேற்பார்வையாளர் பணியிடங்கள்
பணியிட மாற்றம்: சென்னை
தொடங்கும் தேதி: 04.03.2026
கடைசி தேதி: 25.03.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.chennaicorporation.gov.in/

## சினிமா துளிகள்..!

### மூன்றே நாட்களில் ரூ.500 கோடி வசூலை குவித்த துரந்தர்!




இந்தியில் ஆதித்யா தார் இயக்கத்தில் ரன்வீர் சிங், மாதவன், அக்ஷய் கண்ணா, சாரா அர்ஜுன் உள்ளிட்டோர் நடிப்பில் கடந்த டிசம்பரில் வெளியான படம் 'துரந்தர்'. இத்திரைப்படம் உலகம் முழுவதும் சுமார் ரூ.1350 கோடிக்கும் மேல் வசூலித்து மெகா ஹிட் ஆனது. ஆனால் இப்படம் முஸ்லிம்களை கெட்டவர்களாக சித்தரித்து எடுக்கப்பட்ட இந்துத்துவ பிரச்சார படம் என்று விமர்சனம் எழுந்தது.

இந்த நிலையில், துரந்தர் படத்தின் 2 ஆம் பாகமாக "துரந்தர்: தி ரிவெஞ்ச்" (Dhurandhar: The Revenge) திரைப்படம் நேற்று (மார்ச் 19) வெளியானது. இந்தப் படம் ரிலீசுக்கு முன்பே முன்பதிவிலேயே பல கோடிகளை ஈட்டியிருந்தது. பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் வெளியான நிலையில், "துரந்தர் தி ரிவெஞ்ச்" திரைப்படம் முதல் நாளில் உலகளவில் ரூ. 241–க்கும் அதிகமாக வசூலித்து சாதனை படைத்தது. இந்நிலையில், துரந்தர் தி ரிவெஞ்ச் திரைபப்டம் வெளியான முதல் மூன்றே நாட்களில் உலகம் முழுவதும் 500 கோடி ரூபாய் வசூலித்துள்ளது. முதல் பாகத்தை போன்றே இந்தப் படமும் வசூலில் ரூ. 1000 கோடியை கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 25 ஆண்டுகளாக சினிமாவில் நடிக்காதது ஏன்? மனம் திறந்த 'பூவே உனக்காக' சங்கீதா!



தமிழ் சினிமாவின் 90 காலகட்டத்தில் முன்னணி நடிகையாக திகழ்ந்தவர் சங்கீதா. விஜய்யுடன் 'பூவே உனக்காக' படத்தில் நடித்து புகழ்பெற்ற இவர். தமிழில் கடைசியாக 2000–ம் ஆண்டு 'கண் திறந்து பாரம்மா' என்ற படத்தில் நடித்திருந்தார். இவர் தமிழில் 25 ஆண்டுகளுக்குப் பிறகு முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் திரைப்படம், 'காளிதாஸ் 2'. பரத் நாயகனாக நடித்திருக்கும் இந்தப் படத்தில் அஜய் கார்த்திக், அபர்னதி, பவானி ஸ்ரீ உள்பட பலர் நடித்துள்ளனர். இந்தப் படத்தை 'பைவ் ஸ்டார்' செந்தில் இயக்கியுள்ளார்.

சென்னையில் நடந்த படத்தின் இசை வெளியீட்டு விழாவில் பங்கேற்ற சங்கீதாவிடம், '25 ஆண்டுகளாக சினிமாவில் நடிக்காதது ஏன்? என்று கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த சங்கீதா, "வீட்டில் எனக்கு வேலைகள் குவிந்து விட்டது. ஆனாலும் சினிமாவை விட்டு நான் தூரம் போகவில்லை. ஏனெனில் என் கணவர் (ஒளிப்பதிவாளர் – இயக்குனர் சரவணன்) சினிமாவில் தான் இருக்கிறார். இதுநாள் வரை என் வீட்டுக்கான கடமைகளை சரியாக செய்துவிட்டேன் என்பதில் எனக்கு மகிழ்ச்சி.

இந்தச் சூழலில்தான் என்னை பாதிக்கும் கதையாக 'காளிதாஸ் 2' அமைந்தது. அதனால் அதில் நடிக்க சம்மதம் தெரிவித்தேன். இத்தனை ஆண்டுகள் வீட்டில் ராணி மாதிரி இருந்து விட்டு, மீண்டும் சினிமாவில் நடிக்க வந்துள்ளேன். பொதுவாகவே 'இதுதான் வசதி' என்று நினைக்கும் நிலையில் இருந்து அடுத்த கட்டத்துக்கு மாற வேண்டும். அப்போதுதான் வாழ்க்கையின் அடுத்த கட்ட பயணங்கள் ஆரம்பிக்கும். அந்த வகையில் மீண்டும் தமிழ் சினிமாவுக்கு வந்தது மகிழ்ச்சி அளிக்கிறது" என்றார்.





# அனல் பறக்கும் தேர்தல் களம்..!



## அமித்ஷா வீட்டில் உணவருந்திய பழனிசாமி!

புதுடில்லி, மார்ச். 22–

அ. தி.மு.க., பொதுச்செயலரும் முன்னாள் முதல்வருமான பழனிசாமி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை டில்லியில் சமீபத்தில் சந்தித்தார். ஈரான் போர் பதற்றத்தால், பாதுகாப்புக்கான அமைச்சரவைக் கூட்டம் தினமும் நடக்கிறது. இதில் அமித் ஷா பங்கேற்க வேண்டும். அவரால் சென்னை வர முடியாததால், பழனிசாமி டில்லிக்கு அழைக்கப்பட்டார்.



அமித் ஷாவை இரவில் சந்தித்தார் பழனிசாமி. சிரித்த முகத்துடன் இருந்தவரை பார்த்த அமித் ஷா, 'பன்னீர்செல்வம் கதி என்னாச்சு பார்த்தீர்களா? அவரை தி.மு.க., பக்கம் தள்ளிவிட்டீர்களே' என சொல்லி சிரித்ததுடன், 'பன்னீர்செல்வம் மீது எங்களுக்கு நம்பிக்கையே இல்லை; எந்த ஆட்சியை அகற்ற வேண்டும் என மேடம் பாடுபட்டாரோ, அங்கேயே போய் சரண்டர் ஆகிவிட்டாரே' என்றாராம் அமித் ஷா.

அமித் ஷா வீட்டிற்கு இரவு நேரத்தில் யார் வந்தாலும், சாப்பிட்டுத் தான் ஆக வேண்டும். பழனிசாமிக்காக அவல் உப்புமா தயாரித்து வைத்திருந்தனர். அதன் மீது ஓமப்பொடி தூவப்பட்டிருந்தது. உடன், குஜாராத்தி ஸ்டைலில் இனிப்பு சட்னியும் இருந்தது.

'சாப்பிடுங்கள்' என்றதும், 'நான் ஏற்கனவே சாப்பிட்டு விட்டேன்' என்றாராம் பழனிசாமி. 'அவல் உடம்பிற்கு நல்லது' என அமித் ஷா சொல்ல, பழனிசாமி சிறிது சாப்பிட்டாராம். பின், இருவரும் தனியாக நெடுநேரம் பேசினர்.

## திமுக கூட்டணியில் இருந்து தவாக எஸ்கேப்.....!



சென்னை, மார்ச். 22–

சென்னை விருகம்பாக்கத்தில் தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவர் வேல்முருகன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

* தி.மு.க. கூட்டணியில் 10 கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்தி இருந்தோம்.
* நாங்கள் வைத்த எந்த கோரிக்கைகளையும் தி.மு.க. அரசு பரிசீலிக்கவில்லை.
* தி.மு.க.விடம் த.வா.க. 2 தொகுதிகளை கேட்டது, ஒன்று தான் தருவதாக சொன்னார்கள்.
* தமிழகத்தில் அதிகாரிகளின் ஆட்சி தான் நடந்து வருகிறது.
* அதிகாரிகளின் பேச்சை கேட்டு தமிழக வாழ்வுரிமை கட்சியை தி.மு.க. புறக்கணித்திருக்கிறது.
* தி.மு.க. கூட்டணியில் இருந்து என்னை வெளியேற்ற அதிகாரிகள் அறிவுரை கூறி உள்ளனர்.
* சினிமா நடிகர் சொன்னதற்காக அவரது தந்தையின் பெயரை தெருவுக்கு வைக்கின்றனர்.
* தமிழக வாழ்வுரிமை கட்சி தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் இருந்து விலகுகிறது என்பதை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கிறேன்.
* ஆதரவு இயக்கங்களுடன் கலந்தாலோசித்து கூட்டணி குறித்து முடிவு எடுக்கப்படும்.
* 10 கோரிக்கைகளையும் ஏற்கும் கட்சிகளுடன் கூட்டணி அமைப்பது குறித்து முடிவு எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## 'தென்னந்தோப்பு' சின்னத்தில் போட்டியிட ராமதாஸ் முடிவு!

சென்னை, மார்ச். 22–

'அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகம்' என்ற கட்சியை துவக்கியுள்ள சசிகலாவும், பா.ம.க., நிறுவனர் ராமதாசும் கூட்டணி அமைத்துள்ளனர்.

பா.ம.க., தலைவர் அன்புமணிக்கு, அக்கட்சியின் மாம்பழம் சின்னத்தை, தேர்தல் கமிஷன் ஒதுக்கியது.

இதனால், வரும் தேர்தலில் பா.ம.க.,வின் பெயர், கொடி, மாம்பழம் சின்னத்தை ராமதாஸ் பயன்படுத்த முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.



நேற்று முன்தினம் தைலாபுரம் தோட்டத்தில் ராமதாசும், சசிகலாவும் சந்தித்தபோது, இது குறித்து விவாதித்துள்ளனர். அப்போது, அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகத்திற்கு, தேர்தல் கமிஷன் ஒதுக்கியுள்ள தென்னந்தோப்பு சின்னத்தில் போட்டியிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

வன்னியர்கள், முக்குலத்தோர் அதிகம் உள்ள டெல்டா மாவட்டங்கள், வடக்கு, தென் மாவட்டங்களில், அதிகமான தொகுதிகளில் போட்டியிடுவது குறித்து, இருவரும் ஆலோசித்து வருகின்றனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## ராகுல்- பிரியங்கா சண்டை பின்னணி...!

புதுடில்லி, மார்ச். 22–

தமிழகத்துடன் அசாம் சட்டசபைக்கும் தேர்தல் நடக்கிறது. தற்போது அங்கு, முதல் வர் ஹிமந்த பிஸ்வ சர்மா தலைமையில் பா.ஜ., ஆட்சி நடக்கிறது. அசாமில், 10 ஆண்டுகளாக பா.ஜ., ஆட்சியில் உள்ளது. ஆட்சியை தக்கவைக்க அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறார் முதல்வர் சர்மா.



பா.ஜ.,வின் முக்கிய எதிரி காங்கிரஸ். இந்த கட்சியிலிருந்து முக்கிய தலைவர்களை, பா.ஜ., பக்கம் அழைத்து வருகிறார் முதல்வர் சர்மா. இது, காங்கிரசில் குறிப்பாக பிரியங்காவிற்கு பின்னடைவை ஏற் படுத்தியுள் ளது. அசாமின் காங்., வேட்பாளர் தேர்வு மற்றும் பிரசார வியூகங்களை கவனித்து வருகிறார் பிரியங்கா. எப்படியாவது காங்கிரசை ஆட்சியில் அமர வைக்கும் குறிக்கோளுடன் இறங்கி உள்ளார். ஆனால், இவருக்கு இடி மேல் இடியாக இரண்டு சம்பவங்கள் இறங்கி உள்ளன.

அசாம் காங்., – எம்.பி., பிரதியுத் பொர்தோலி, கட்சியிலிருந்தும் எம்.பி., பதவியில் இருந்தும் ராஜினாமா செய்து விட்டார். இவர் பா.ஜ.,வில் சேர்ந்துள்ளதோடு, திஸ்பூர் சட்டசபை தொகுதியிலிருந்து பா.ஜ., வேட்பாளராக போட்டியிடுகிறாராம். இவரது மகன் பிரதீக் மார்கரெட்டா, அத்தொகுதியின் காங்., வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். தந்தை பா.ஜ.,வில் சேர்ந்ததை அடுத்து, இவர், 'நான் போட்டியிடப் போவதில்லை' என அறிவித்து விட்டார். இன்னொரு பக்கம், அசாம் காங்., முன்னாள் துணை தலைவர் திவ்யஜோதி தாலுக்தாரும் பா.ஜ.,வில் இணைந்து விட்டார். தன் தலைமையில் உள்ள மாநிலத்தில் இப்படி நடக்கிறதே என்ற ஆதங்கம் பிரியங்காவிற்கு ஏற்பட்டுள்ளது. ஆனால் ராகுலோ, இது குறித்து கவலைப்படவில்லை. 'யார் யார் காங்கிரசிலிருந்து போகின்றனரோ போகட்டும்; மக்கள் நம் பக்கம் தான்' என்கிறாராம் அவர்.

'எப்போதுமே தேர்தல் நேரத்தில் காங்., தலைவர்களை பணம் கொடுத்து, தன் பக்கம் கொண்டு வருவார் அமித் ஷா. அது தான் அவரது வழக்கம். இப்படி தான் பா.ஜ.,வினர் அனைத்து மாநிலங்களிலும் ஆட்சியைப் பிடிக்கின்றனர்' என குற்றம் சாட்டுகின்றனர் காங்., தலைவர்கள். இதில் சுவாரசியம் என்னவென்றால், தற்போது முதல்வராக உள்ள ஹிமந்த பிஸ்வ சர்மாவும் காங்கிரசிலிருந்து பா.ஜ.,வுக்கு வந்தவர் தான்.

## தி.மு.க. – காங்கிரஸ் தொகுதி பங்கீடு இழுபறி – முதலமைச்சரை சந்தித்தார் ப.சிதம்பரம்!



புதுச்சேரி, மார்ச். 22–

புதுவை மாநிலத்தில் காங்கிரஸ், தி.மு.க. கூட்டணி அமைத்து போட்டியிடுகிறது. ஆனால் கூட்டணிக்கு யார் தலைமை வகிப்பது, கூடுதல் தொகுதிகளில் யார் போட்டியிடுவது என்பதில் இரு கட்சியினருக்கும் கருத்து வேறுபாடு இருந்து வருகிறது. இதனால் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை உடன்பாடு எட்டப்படாமல் இன்னமும் சவ்வு மிட்டாய் போல் இழுத்து வருகிறது. தி.மு.க.வினர் ஒருபுறம் கூட்டணி கட்சிகளான இந்திய கம்யூனிஸ்டு, விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட கட்சிகளை அழைத்து தனியாக பேச்சுவார்த்தை நடத்தியது. கூட்டணியில் காங்கிரஸ், தி.மு.க. இடையே பல கட்ட பேச்சுவார்த்தை நடத்தியும் தொகுதி பங்கீடு தொடர்பாக சுமுக உடன்பாடு எட்டப்படவில்லை.

தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை நடத்துவதற்காக நேற்று புதுவை தனியார் ஓட்டலில் புதுச்சேரி தி.மு.க. பொறுப்பாளர் ஜெகத்ரட்சகன் எம்.பி. தலைமையில் புதுவை மாநில அமைப்பாளர் சிவா எம்.எல்.ஏ., தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் சம்பத், நாஜிம் ஆகியோர் காத்திருந்தனர். அதேபோல் கூட்டணி கட்சிகளான இந்திய கம்யூனிஸ்டு கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் வருகை தந்தனர்.

காங்கிரஸ் கட்சிக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் இரவு 10 மணி வரை பேச்சுவார்த்தைக்கு வரவில்லை. இதனால் வெகுநேரம் காத்திருந்த ஜெகத்ரட்சகன் எம்.பி. நேற்றிரவு மாநில அமைப்பாளர் சிவாவுடன் அவசரமாக சென்னைக்கு புறப்பட்டு சென்றார். இதனால் காங்கிரஸ்–தி.மு.க. இடையே மீண்டும் தொகுதி பங்கீட்டில் இழுபறி நீடிக்கிறது.

## புதுச்சேரி தவெக வேட்பாளர் பட்டியல் வெளியீடு!



புதுச்சேரி, மார்ச். 22–

30 தொகுதிகள் கொண்ட புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் ஏப்ரல் 9–ந்தேதி தேர்தல் நடைபெற உள்ளது. தமிழகத்தைப் போலவே புதுச்சேரியிலும் சட்டமன்றத் தேர்தல் வேலைகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. புதுச்சேரியில் உள்ள 30 தொகுதிகளிலும் விசில் சின்னத்தில் விஜய்யின் தவெக போட்டியிடுகிறது. இந்த நிலையில், தமிழக வெற்றிக் கழகத்தின் புதுச்சேரி வேட்பாளர்களை அக்கட்சியின் தலைவர் விஜய் மார்ச் 23–ல் அறிவிக்கிறார்.அதற்காக வேட்பாளர் தேர்வு கடந்த 16 ஆம் தேதி நடைபெற்று இறுதி செய்யப்பட்டது. இந்த நிலையில் வேட்பாளர்கள் பட்டியலை விஜய் மார்ச். 23–ல் அறிவிக்கிறார் . அவர்கள் அனைவரும் வேட்புமனு தாக்கலின் இறுதி நாளான 23ஆம் தேதி மனுதாக்கல் செய்யவுள்ளனர்.

## பா.ஜ.க.வில் இருந்து சரத்குமார் விலகுகிறாரா?



சென்னை, மார்ச். 22–

சரத்குமார் கடந்த 2024 மார்ச் மாதத்தில் சமத்துவ மக்கள் கட்சியை கலைத்துவிட்டு பாஜகவுடன் தனது கட்சியை இணைத்துகொண்டு தொடர்ந்து பா.ஜனதாவுக்காக தேர்தல் பணி ஆற்றினார். விருதுநகர் நாடாளுமன்ற தொகுதியில் ராதிகா சரத்குமார் களம் கண்டார். அந்த தேர்தலில் அவர் தோல்வியை தழுவினார்.

இதற்கிடையே, பா.ஜனதாவில் இணைந்து 2 ஆண்டுகள் ஆகியும் சரத்குமாருக்கும், அவரது ஆதரவாளர்களுக்கும் எந்தவொரு பதவியும் பா.ஜனதாவில் வழங்கப்படவில்லை. இந்தநிலையில், சட்டசபை தேர்தலும் நெருங்கி விட்டதால் சரத்குமார் தனது ஆதரவாளர்கள் சிலருக்கு போட்டியிட பா.ஜனதா தலைமையிடம் வாய்ப்பு கேட்டிருந்தார்.

ஆனால் அதற்கு பா.ஜனதா தலைமையிடம் இருந்து எந்தவொரு பதிலும் வரவில்லை என்று கூறப்படுகிறது. இதனால் பா.ஜனதா சரத்குமாரை புறக்கணிப்பதாக அவரது ஆதரவாளர்கள் சமூக வலைத்தளத்தில் கருத்து பதிவிட்டனர். பா.ஜனதாவில் இருந்து விலகுங்கள் என்றும் குரல் எழுப்பி வருகின்றனர். ஏற்கனவே பா.ஜனதா தலைமை மீது அதிருப்தியில் இருக்கும் சரத்குமார் தனது ஆதரவாளர்களின் கருத்துக்களை கேட்கவும், அடுத்தக்கட்ட நகர்வு குறித்து விவாதிக்கவும் சென்னையில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) அவசர ஆலோசனை கூட்டத்தை கூட்டியிருக்கிறார்.

சென்னை தியாகராயநகர் கீதம்ஹாலில் காலை 10 மணிக்கு நடக்கும் நிகழ்வில், அகில இந்திய சரத்குமார் தலைமை ரசிகர் மன்ற நிர்வாகிகள், சுப்ரீம்ஸ்டார் பேரவை நிர்வாகிகள், உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று சரத்குமார் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அந்த ஆலோசனை கூட்டத்திற்கு பிறகு அரசியலில் தனது அடுத்தக்கட்ட நகர்வு குறித்து சரத்குமார் செய்தியாளர்களுக்கு பேட்டி அளிக்க இருக்கிறார்.

## தமிழ்நாட்டில் இதுவரை ரூ.75.03 கோடி மதிப்பிலான பணம், பரிசு பொருட்கள் பறிமுதல்!

சென்னை, மார்ச். 22–

இந்திய தேர்தல் ஆணையத்தால் தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்–2026, வரும் 23.4.2026 அன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்ட நாள் முதல் தேர்தல் நடத்தை விதிகள் (Model Code of Conduct) உடனடியாக அமலுக்கு வந்துள்ளன. இதனைத் தொடர்ந்து, தமிழகம் முழுவதும் இதுவரை தேர்தல் விதிமுறைகளை மீறியதாக பறக்கும் படையினர் மூலம் பறிமுதல் செய்யப்பட்ட பணம், மதுபானம், போதைப்பொருட்கள், தங்கம், வெள்ளி மற்றும் இதர பரிசு பொருட்கள், இலவசங்கள் ஆகிய பொருட்கள், அவற்றின் மதிப்பு குறித்து தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:



தேர்தல்களை நடத்துவதில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்பினை உறுதி செய்வதற்காக, தமிழ்நாட்டிலுள்ள 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் 136 பொதுப்பார்வையாளர்கள், 40 காவல் பார்வையாளர்கள் மற்றும் 151 செலவினப் பார்வையாளர்களையும் இந்திய தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது. குடிமக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள், தேர்தல்கள் தொடர்பான புகார்களை நேரடியாகப் பதிவு செய்யவும் அல்லது விதிமீறல்களைப் புகாரளிக்கவும் ஏதுவாக, மத்திய பார்வையாளர்களின் தொடர்பு விவரங்கள் அந்தந்த மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மூலம் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் பகிரப்பட்டுள்ளது. இந்தியத் தேர்தல் ஆணையம் வலுவான தேர்தல் செலவினக் கண்காணிப்பினை உறுதி செய்யும் விதமாக மாநிலம் முழுவதும் கண்காணிப்பு மற்றும் அமலாக்கக் குழுக்கள் தீவிரப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இந்தத் தீவிரப்படுத்தப்பட்ட அமலாக்க நடவடிக்கைகளின் விளைவாக. 21 மார்ச் 2026 நிலவரப்படி தமிழ்நாடு முழுவதும் மொத்தமாக பின்வரும் பறிமுதல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அதன்படி ரொக்கப் பணம் ரூ.23.74 கோடி, மதுபானம் ரூ.51 லட்சம், போதைப்பொருள் சார்ந்த பொருட்கள் ரூ.5.63 கோடி, விலைமதிப்பற்ற உலோகங்களான தங்கம், வெள்ளி போன்ற பொருட்கள் ரூ.23.19 கோடி, இதர பொருட்கள் அல்லது இலவசங்கள் ரூ.21.96 கோடி என மொத்தம் ரூ.75.03 கோடி மதிப்பிலான பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் சுவிதா இணையதளம், வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் இணையவழி வேட்புமனுத் தாக்கல், வேட்புமனு சமர்ப்பிப்பதற்கான நேர ஒதுக்கீடுகளை முன்பதிவு செய்தல், பொதுக் கூட்டங்கள், பேரணிகள் உள்ளிட்ட அனுமதிகளுக்கான விண்ணப்பங்கள் போன்ற தேர்தல் நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு வசதியளிக்கும் ஒரு விரிவான டிஜிட்டல் தளத்தை வழங்குகிறது. விண்ணப்பதாரர்கள் http://suvidha.ecl.gov.in/ என்ற இணையதளத்தை அணுகி இணையவழி செயல்முறையை நிறைவு செய்த பிறகு, விண்ணப்பதாரர்கள் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியை எடுத்து, தேவையான ஆவணங்களுடன் தேர்தல் அதிகாரியிடம் நேரில் சமர்ப்பிக்க வேண்டும்.

சுவிதா இணையதளம் தேர்தல் தொடர்பான செயல்களில் செயல்திறனை கணிசமாக மேம்படுத்தி மனிதத் தலையீட்டைக் குறைக்கிறது. மேலும் தேர்தல்களின் போது வெளிப்படையான அனுமதி செயல்முறையை உறுதி செய்கிறது. இதன் மூலம் இதுவரை 2,443 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அவற்றில் 737 விண்ணப்பங்கள் காலக்கெடுவுக்குள் தீர்க்கப்பட்டன. மீதமுள்ளவை செயலாக்கத்தில் உள்ளன. 2026–ம் ஆண்டு நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல்களின் ஒரு பகுதியாக, ஜனநாயகச் செயல்முறையில் பங்கேற்பதற்காக, தகுதிவாய்ந்த ஒவ்வொரு குடிமகனின் பெயரும் வாக்காளர் பட்டியலில் இடம்பெறுவதை உறுதி செய்வது இன்றியமையாததாகும். எனவே, தகுதிவாய்ந்த அனைத்துக் குடிமக்களும் https://electoral–search.eci.gov.in/ என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தைப் பார்வையிட்டு, வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயர்களைச் சரிபார்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெறாதவர்கள், பெயரைச் சேர்ப்பதற்கு விரைவில் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் 26.3.2026 ஆகும்.

குடிமக்கள் தங்கள் பெயரைச் சேர்க்கக் கோரும் விண்ணப்பங்களை, படிவம்–6 (Form–6)–ஐப் பயன்படுத்தி, சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலரின் அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம். மேலும் எளிதாகப் பதிவு செய்துகொள்ளும் வகையில், https://www.voters.eci.gov.in/ என்ற இணையவழி வசதியையும் பயன்படுத்திக்கொள்ளலாம். மேலும், இத்தேவைக்காக, Google Play Store–ல் உள்ள "ECINet" என்ற கைப்பேசிச் செயலியையும் பயன்படுத்திக்கொள்ளலாம்.

மேலும், குடிமக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்காக, "Book a Call with BLO" (வாக்கு சாவடி நிலை அலுவலருடன் தொலைபேசி வழித் தொடர்பு) என்ற வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. உரிய நேரத்தில் வாக்காளர் பட்டியலை சரிபார்த்து பெயரை பதிவு செய்துகொள்வது, கடைசி நேரத்தில் ஏற்படக்கூடிய சிரமங்களைத் தவிர்க்க உதவும். எனவே, அனைத்து குடிமக்களும் தேர்தல் செயல்முறையில் முழுமையாகப் பங்கேற்பதற்கு ஏதுவாக, தங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்பட்டிருப்பதை உறுதி செய்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## புதுச்சேரி இண்டி கூட்டணியில் குழப்பம்; பேச்சு வார்த்தைக்கு வராத காங்கிரசார்: சென்னைக்கு புறப்பட்ட தி.மு.க.,வினர்!

புதுச்சேரி. மார்ச். 22–

புதுச்சேரியில், 12 மணி நேரம் காத்திருந்தும் பேச்சு வார்த்தைக்கு வராத காங்., கட்சியினரால் கடுப்பான தி.மு.க., பேச்சு வார்த்தை குழுவினர், கட்சி தலைமையில் தெரிவிக்க, நேற்று இரவு சென்னை புறப்பட்டு சென்றனர்.



புதுச்சேரியில் காங்., தி.மு.க., இடையே தொகுதி பங்கீடு இதுவரையில் முடியாமல் இழுபறி நீடித்து வருகிறது. இந்நிலையில் நேற்று காங்., கட்சியுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு காலை 10:00 மணி முதல் அக்கார்டு ஓட்டலில் தி.மு.க., பேச்சு வார்த்தை குழுவினர், புதுச்சேரி தேர்தல் பொறுப்பாளர் ஜெகத்ரட்சகன், மாநில அமைப்பாளர்கள் சிவா, நாஜிம், சம்பத் எம்.எல்.ஏ., ஆகியோர் காத்திருந்தனர். இரவு 8:45 மணி அளவில் காங்., மேலிட பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் தலைமையில் காங்., கட்சியினர் பேச்சு வார்த்தைக்கு வருவர் என இரவு 10:00 வரையில் காத்திருந்தும், காங்., கட்சியினர் வரவில்லை. இதனால் அதிர்ச்சியும், எரிச்சலும் அடைந்த தி.மு.க., பேச்சுவார்த்தை குழுவினர் உடனடியாக ஓட்டலில் இருந்து வெளியேறினர். இதுகுறித்து தி.மு.க., தலைமையிடம் தெரிவிக்க நேற்று இரவே சென்னை புறப்பட்டு சென்றனர்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020